1433

*සියලු ම හිමිකම් ඇවිරිණි]*
*முழுப் பதிப்புரிமையுடையது]*
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இந்து தர்மாசிரியர் பரீட்சை - 2015 (2017)**

Hindu Dharmaciriyar Examination - 2015 (2017)

**(02) சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்**

Saints and Leaders of Religious Movements

II ஆம், III ஆம் பகுதிகளுக்கான விடைகளை உமக்குத் தரப்படும் **விடைத்தாளில்** எழுதிப் பகுதி **I** இன் விடைத்தாளுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவு செய்க.

## பகுதி II

**2.** இந்து மக்களின் அறவாழ்வியல் பற்றிய கண்ணோட்டத்தில் இராமாயணத்திற்குரிய இடத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.

(i) நூலாசிரியரும் அதன் அமைப்பும்
(ii) இராமாயணம் கூறும் வாழ்வியல் அறங்கள்
(iii) இராஜ தர்மம்
(iv) இந்துக்களின் மத்தியில் இராமாயணத்தின் செல்வாக்கு (20 புள்ளிகள்)

**3.** இராமானுஜரின் விசிட்டாத்துவைதக் கோட்பாட்டினை மேல்வரும் விடயங்களைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

(i) இராமானுஜரின் வாழ்வும் பணியும்
(ii) விசிட்டாத்துவைத இறைக் கோட்பாடு
(iii) விசிட்டாத்துவைத ஆன்மக் கோட்பாடு
(iv) பிரபத்தியும் ஆன்ம விடுதலையும் (20 புள்ளிகள்)

**4.** ஆரிய சமாஜத்தின் பணிகளை மேல்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு ஆராய்க.

(i) ஆரிய சமாஜம் பற்றிய அறிமுகம்
(ii) சமயப் பணிகள்
(iii) சமூகப் பணிகள்
(iv) பணிகளின் பலாபலன்கள் (20 புள்ளிகள்)

**5.** சுவாமி சின்மயானந்தர் சின்மயாமிஷன் மூலமாக இந்து சமயத்திற்கும் சமூகத்திற்குமாற்றிய பணிகளை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் ஆராய்க.

(i) சுவாமி சின்மயானந்தரின் சுருக்க வரலாறு
(ii) சமயப் பணி
(iii) சமுதாயப் பணி
(iv) இன்றைய காலப் பணி (20 புள்ளிகள்)

## பகுதி III

**6.** "இந்து மதத்தை உலகறியச் செய்த பெருமையுடையவர் சுவாமி விவேகானந்தர்" இக்கூற்றை ஆராய்க. (20 புள்ளிகள்)

**7.** வடநாட்டுப் பக்திநெறியில் ஸ்ரீசைதன்யரின் இடத்தினை எடுத்துக்கூறுக. (20 புள்ளிகள்)

**8.** சுவாமி விபுலானந்தரின் சைவப்பணிகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**9.** மேல்வரும் சமயாசாரியர்களுள் எவரேனும் **இருவர்** இந்துசமய மேம்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் பற்றிக் குறிப்புரை எழுதுக.

(i) மீராபாய்
(ii) கபீர்தாஸர்
(iii) நாவலர் (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *